# அண்ணாவியார் V.T. செல்வராஜா

## ஆழத்து முத்துக்கள்

- ப. ஶ்ரீஸ்கந்தன் -

நடிகமணி வி.வி. வைரமுத்து அவர்களது 'மயான காண்டம்' இசை நாடகத்தின் முதல் மேடையேற்றத்தின் போது அயலாத்துப் பிள்ளையாக நடித்தவரும், நடிகமணியின் மைத்துனர் முறையானவரும், காங்கேசந்துறை வசந்தகான சபாவின் ஆரம்பகால உறுப்பினரும், சபாவினர் மேடையேற்றிய பல்வேறு இசை நாடகங்களில் பிரதான பெண் வேடங்கள் ஏற்றுச் சிறப்புச் செய்தவருமான அண்ணாவியார் V.T. செல்வராஜா அவர்களை இம்மாத ஆழத்து முத்துக்களில் பதிவு செய்கிறோம்.

இவரது உற்றார் உறவினர்கள் யாவரும் இசை நாடகக் கலைஞர்களாக இருந்தமையால் சிறுவயதிலேயே இவர் இசை நாடகத்தில் ஈடுபாடு கொண்டவராக விளங்கினார். இவரது தந்தையார் வைரவன் தில்லையன் ஒரு நாடகக்கலைஞன், மிருதங்க வித்துவான். தாயார் சின்னம்மாவின் தகப்பனார் இராமர் ஒரு காவடி அண்ணாவியார். செல்வராஜா அவர்களது தகப்பனாரும் நடிகமணி வி.வி. வைரமுத்து அவர்களின் தாயாரும் சகோதரர்கள். காங்கேசந்துறை அமெரிக்கன் மிஷன் ஆங்கிலப் பாடசாலையில் கல்விகற்ற இவர் காங்கேசந்துறை சீமெந்து தொழிற்சாலையில் மின்சாரப் பகுதியில் கடமையாற்றி ஓய்வு பெற்றவர்.

பாடசாலை நாட்களில் 'மந்திரிகுமாரி' நாடகத்தில் கதாநாயகனாக நடித்த இவர் தனது 12வது வயதில் ஆசிரியர் சின்னத்துரையின் நெறியாள்கையில் 'சத்தியவான் சாவித்திரி' இசை நாடகத்தில் சாவித்திரியாக வேடமேற்றார். இந்நாடகம் வவுனியாவிலும் மேடையேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது. இதன் பின்னர் இசை நாடக ஈடுபாடு காரணமாக நடிகமணி வி.வி. வைரமுத்து, கரவெட்டி நற்குணம், பபூன் சின்னத்துரை, வசவிளான் மார்க்கண்டு போன்ற பெரும் கலைஞர்களுடன் இணைந்து நடிக்கும் பாக்கியம் பெற்று புகழ்பெற்ற ஒரு கலைஞனாக விளங்கினார்.

நடிகமணி வி.வி. வைரமுத்துவின் மைத்துனரான கலைஞர் செல்வராஜா காங்கேசந்துறை வசந்தகான சபாவில் இணைந்து, சிறுவயதிலேயே சபாவினரது நாடகங்களில் நடிக்க ஆரம்பித்தார். 1953ல் யாழ் நகர மண்டபத்தில் சபாவினர் மேடையேற்றிய 'மயான காண்டம்' இசை நாடகத்தில் அயலாத்துப்பிள்ளையாக இவர் நடித்திருந்தார். இந்நாடகத்தில் நடிகமணி வி.வி. வைரமுத்து அரிச்சந்திரனாகவும் அவரது ஒன்றுவிட்ட சகோதரி பத்மாவதி சந்திரமதியாகவும் கரவெட்டி நற்குணம் சத்தியகீர்த்தியாகவும் நடித்திருந்தனர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தீபாவளிக் கலைவிழாவுக்காக இலங்கையர்கோன், சாணா, பேராசிரியர் சு. வித்தியானந்தன் ஆகியோரது முயற்சியினால் இந்நாடகம் மேடையேற்றம் கண்டது. இம்மேடையேற்றத்துக்குப் பல சிறப்புகள் உள்ளன. மூவாயிரம் தடவைகளுக்கு மேல் மேடையேற்றப்பட்ட 'மயான காண்டம்' இசைநாடகத்தின் முதல் மேடையேற்றம் இதுவென்பதும், 'சம்பூர்ண அரிச்சந்திரா' என்ற முழுநீள இசை நாடகத்தை இரண்டு மணிநேர நாடகமாக குறுக்கி மேடையேற்றம் கண்டதும், முதன்முதலாக நடிகமணி வி.வி. வைரமுத்து ஆண் பாத்திரம் ஏற்று நடித்ததும், முதன் முதலாக ஒரு பெண் சந்திரமதியாக நடித்ததும் இந்நாடகத்தில் என்பதும் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

இவ்விடத்தில் நடிகமணி பற்றிய சில குறிப்புகளையும் நினைவுகளையும் கலைஞர் பகிர்ந்து கொண்டார். "ஒரு காலத்தில் காங்கேசந்துறை துறைமுகம் இந்தியாவிலிருந்து வருகின்ற செட்டியார்களின் வள்ளங்கள் தரித்து நிற்கும் இடமாக இருந்தது. அவர்கள் நெல்லு, சட்டி - பானை போன்றவற்றை கொண்டு வந்து கிட்டங்கிகளில் சேர்த்து வைத்து பண்டமாற்று வியாபாரங்களில் ஈடுபட்டு வந்தனர். அவர்களுடனான பழக்கத்தில் சங்கீதம் படிக்க வேண்டும் என்ற தன் ஆசையைப் பூர்த்தி செய்ய அவர்களுடன் நடிகமணி இந்தியா சென்றார். அங்கு குருகுலவாசம் மூலம் சங்கீதம் பயின்ற அவர், சங்கரதாஸ் சுவாமிகளின் இசைநாடகப் பாடல்களையும் கற்றுத் தேர்ந்தார். அந்நாட்களில் மிருதங்கம், ஆர்மோனியம் போன்ற வாத்தியங்களையும் கற்றுக்கொண்டார். ஊருக்கு திரும்பி வந்த அவர் ஆர்மோனியத்தில் பிரபல்யமான கலைஞராக விளங்கினார்.



இவரது தமையனார் காசிநாதன் மிருதங்கத்தில் வல்லவராக இருந்தார். இவர்கள் இருவரும் அப்போது மேடையேறிய இசை நாடகங்களின் பின்னணிக் கலைஞர்களாக திகழ்ந்தனர். நாளடைவில் இசை நாடகங்களில் பெண் பாத்திரங்கள் ஏற்று நடிக்க ஆரம்பித்த நடிகமணி 1953ல் நடைபெற்ற 'மயான காண்டம்' மேடையேற்றத்தின் பின்னர் கதாநாயகன் பாத்திரங்கள் ஏற்றுப் பிரபல்யமான கலைஞன் ஆனார். நடிகமணிக்கு முன்பாக வதிரியைச் சேர்ந்த அண்ணாச்சாமி என்பவர் பிரதான ஆண் பாத்திரங்களில் நடித்து வந்தார். மயான காண்டத்தில் அரிச்சந்திரன், பூதத்தம்பியில் அந்தராசி ஆகிய பாத்திரங்கள் நடிகமணிக்குப் புகழ் சேர்த்த பாத்திரங்களாகும்."

காங்கேசந்துறை வசந்தகான சபாவினர் மேடையேற்றிய அனைத்து இசை நாடகங்களிலும் பங்குபற்றிய கலைஞர் V.T. செல்வராஜா பொதுவாக அந்நாடகங்களின் எல்லாப் பாத்திரங்களையும் ஏற்று நடிக்கவல்ல ஆற்றல் பெற்றவர். சபாவினரது எல்லாக் கலைஞர்களுமே நாடகமொன்றில் ஒருவர் வராதவிடத்து அப்பாத்திரத்தை ஏற்று நடிக்கும் வல்லமை பெற்றிருந்தனர். இந்த வகையில் 'மயான காண்டம்' நாடகத்தில் ஆரம்பத்தில் சந்திரமதியாக சோக சோபித சொர்ணக் கவிக்குயில் இரத்தினம், பின்னர் நடிககலாமணி செல்வம், இறுதியாக தைரியநாதன் போன்றோர் நடிகமணியுடம் நடித்த காலகட்டத்தில், தேவையேற்படும் போதெல்லாம் சந்திரமதியாக வேடமேற்றுச் சிறப்புச் செய்தவர் கலைஞர் செல்வராஜா.

இவ்வாறு 'சத்தியவான் சாவித்திரி' - சாவித்திரி, 'ஏழுபிள்ளை நல்லதங்காள்' - நல்லதங்காள், 'ஞானசௌந்தரி' - ஞானசௌந்தரி, 'பவளக்கொடி' - பவளக்கொடி, சுபத்திரை, 'வள்ளிதிருமணம்' - வள்ளி போன்ற பிரதான பெண் பாத்திரங்களில் இவர் நடித்துள்ளார். இவை தவிர, சபாவினர் மேடையேற்றிய 'சம்பூர்ண அரிச்சந்திரா' இசை நாடகத்தில் நாரதர், சத்தியகீர்த்தி, 'சத்தியவான் சாவித்திரி'யில் நாரதர், 'பூதத்தம்பி'யில் சின்னலாந்தேசு, 'வள்ளி திருமணத்'தில் முருகன், வேடன், நாரதர் ஆகிய ஆண் பாத்திரங்கள் ஏற்றும் இவர் சிறப்புச் செய்துள்ளார்.


இசை நாடகப் பாடல்களைச் சிறப்பாகப் பாடவல்லவரான இவர் சில பாடல்களைப் பாடிக்காட்டினார். அவற்றுள், கரம் இழந்த ஞானசௌந்தரி மனம் வருந்திப் பாடும் 'அப்பா மகளே பாவி... நொந்தழக் கேட்கவில்லையோ...' என்ற பாடலையும் தன் மன்னன் அரிச்சந்திரனைத் தேடி காட்டினுள் அலைந்து திரியும் மந்திரி சத்தியகீர்த்தி பாடுகின்ற 'தேடித் திரிகின்றேனே மன்னனை நான்...' என்ற பாடலையும் மனமுருகப் பாடினார்.

வசந்தகான நாடக சபா மட்டுமல்லாது இவர் வேலை செய்த காங்கேசந்துறை சீமெந்து தொழிற்சாலை நாடக மன்றம் மேடையேற்றிய கந்தன் கருணை, சத்தியவான் சாவித்திரி, பூதத்தம்பி, மந்திரிக்குமாரி ஆகிய நாடகங்களில் முக்கிய பெண் பாத்திரங்கள் ஏற்று நடித்ததோடு அந்நாடகங்களை இயக்கியுமிருந்தார். இந்நாடகங்களில் வில்லிசைக் கலைமாமணி சின்னமணியின் மைத்துனரான மாதனை மகாலிங்கம் பிரதான ஆண்பாத்திரங்களில் நடித்திருந்தார். மேலும், வேம்படி மகளிர் பாடசாலை மாணவிகளுக்கு சத்தியவான் சாவித்திரி, நல்லதங்காள் நாடகங்களைப் பழகியிருந்தார். இவை இரண்டும் நாடகப் போட்டிகளில் பரிசுகள் பெற்றன. இதே போல் வசந்தகான சபாவினர் மேடையேற்றிய, முற்றிலும் பெண்கள் நடித்த மயான காண்டம், சத்தியவான் சாவித்திரி, பூதத்தம்பி, ஞான சௌந்தரி, வள்ளி திருமணம் ஆகிய இசை நாடகங்களை இவர் நெறியாள்கை செய்திருந்தார். பெண்கள் நடித்த மயான காண்டம் இசை நாடகம் அரியாலை சுதேசிய விழா நாடகப் போட்டியில் முதற்பரிசு பெற்றது குறிப்பிடத்தக்கது. மேலும் பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளையுடன் இணைந்து யாழ். மத்திய கல்லூரி மாணவர்களுக்கு ஒரு நாடகப் பட்டறையை நடத்தியுள்ளார்.

மேற்கூறப்பட்ட இசை நாடகங்களில் இவரது மகளான சுகந்தினி ஆண் பாத்திரங்கள் ஏற்றுப்பாடி நடித்தமை முக்கிய அம்சமாகும். மேலும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சங்கீதத்தில் பட்டம் பெற்ற இவரது மகள் குமுதினி டென்மார்க் நாட்டில் சுருதிலய இசைக் கல்லூரியையும், இன்னொரு மகள் தாரணி பிரான்ஸ் நாட்டில் ஒரு நாட்டியப்பள்ளியையும் நடத்தி வருகின்றனர்.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி அரச விருதான 'கலாபூஷணம்', மாகாண சபையின் 'முதல்வர் விருது', நல்லூர் பிரதேச செயலகத்தின் 'கலைஞானச் சுடர்', சீமெந்து தொழிற்சாலை நாடகமன்றம் வழங்கிய 'கலைச்செல்வன்' ஆகிய கௌரவங்கள் இவருக்குக் கிடைத்துள்ளன.

இசை நாடகங்கள் மருவி வரும் இக்கால கட்டத்தில் 85 வயதான ஒரு பழம்பெரும் இசை நாடகக் கலைஞனைச் சந்தித்த மகிழ்ச்சியும் நடிகமணி வி.வி வைரமுத்துவுடன் வாழ்ந்த ஒரு கலைஞனைக் கண்ட பூரிப்பும், அமைதியான ஒரு நாடகக் கலைஞனின் இனிய பாடல்களைக்கேட்ட திருப்தியும் இச்சந்திப்பில் எனக்குக் கிடைத்தன.



sriskandan@thaiveedu.com